பல் வைத்தியப் படிப்புத் தேர்வுகள்

*238. வின—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரியில் 1967–68, 1968–69-ம் ஆண்டு தேர்வுகளில் பல் வைத்தியப் பயிற்சி பிரிவில் மாணவர்களின் தேர்வு எத்தனை சதவிகிதம்?

(இ) மருத்துவக் கல்லூரியில் பயிலும் மற்ற மாணவர்களின் தேர்வைவிட இவை எத்தனை சதவிகிதம் குறைவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

(அ) பி. டி. எஸ்—

	ஆண்டு	சதவிகிதம்.
பி. டி. எஸ்—	1968	47.2
	1969	57.8
எம். பி. பி. எஸ்—	1968	48.5
	1969	46.5

(இ) 1968-ம் ஆண்டு பி.டி.எஸ். மாணவர்களின் தேர்வு எம். பி. பி. எஸ். மாணவர்களின் தேர்வைவிட 1.3 சதவிகிதம் குறைவு.

ஆனல், 1969-ம் ஆண்டு எம்.பி.பி.எஸ். மாணவர்களின் தேர்வை விட 11.3 சதவிகிதம் கூடுதலாக உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரித் தேர்வுகளில், நல்ல மார்க் வாங்கின மாணவர்கள்கூடத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று ஹைக்கோர்ட்டில் ரிட்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனவே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி, பல் வைத்தியப் பயிற்சிப் பிரிவில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றியது. இத் துணைக் கேள்வி, மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

கேள்வி எண்கள் 190, 191 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Fishing harbours

*239 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Public Works Department has undertaken the construction of the R.C.C. jetty in Rameswaram; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : வேளாண்மைத் துறையின் 30—10—1968 தேதியிட்ட அரசு ஆணை எண் 3219-ல் ரூ. 9.90 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் இராமேஸ்